# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 18 திங்கட்கிழமை (04.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 08


## போவரின் கிளிநொச்சி விஜயம் இப்போதைக்கு இல்லை; அரசாங்கத்தின் முடிவு தெரிந்த பின்னரே சாத்தியம்!

கொழும்பு, டிசெ. 4

இலங்கை வந்துள்ள சமாதானத்துக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர் இப்போதைக்கு கிளிநொச்சி செல்லமாட்டார்.

நாளைமறுதினம் புதன்கிழமை அரசாங்கத்தின் அமைச்சரவை கூடுகிறது. அந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளை ஒடுக்கும் திட்டங்களில் ஒன்றாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அது சம்பந்தமாக முடிவு தெரியும் வரை - வெளியிடப்படும் வரை - போவர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்வதை அரசு விரும்பவில்லை என்றுநோர்வேக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதனை நோர்வேத் தூதரக தகவல்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன. அரசின் கோரிக்கையை அடுத்து விசேட சமாதானத் தூதுவர் தமது கிளிநொச்சி விஜயத்தை ஒத்திவைத்துள்ளார் என்று நோர்வேத் தூதரகப் பேச்சாளர் எரிக் ஹன்ஸ்பேர்க் நேற்றுத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடனான உறவுகள் குறித்து அமைச்சரவை புதன்கிழமை முடிவுசெய்யும். அதுவரைக்கும் நோர்வே புலிகளுடன் எதுவிதமாகவும் தொடர்பு கொள்வதை நாம் விரும்பவில்லை - என்று அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பாலித கொஹென்ன தெரிவித்தார்.

ஏற்கனவே திட்டமிட்டிருந்தவாறு நாளை செவ்வாய்கிழமை போவர் கிளிநொச்சிக்குச் செல்லமுடியாது என்ற தகவல் அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் கொஹென்ன மேலும் தெரிவித்தார். (அ)

# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த அரசு முடிவு

## அமைச்சர்கள், சட்ட நிபுணர்களுடன் ஜனாதிபதி நீண்ட ஆலோசனை கலப்பு

கொழும்பு,டிசெம்பர்4

**புதிய அவசரகாலச் சட்ட விதிகளையும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவர ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்திருக்கின்றார்.**

**விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தல்கள் அதிகரித்திருப்பதைக் காரணம் காட்டி, பாதுகாப்பு நடவடிக்கைகளை இறுக்க வசதியாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீண்டும் அமுல் செய்வது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கின்ற வேளையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சாதக பாதகங்கள் குறித்து சிரேஷ்ட அமைச்சர்களுடனும், சட்ட நிபுணர்களுடனும் ஜனாதிபதி நீண்ட கலந்துரையாடல்களை நடத்தியிருக்கிறார்.**

வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் அதன் பிறகு சனிக்கிழமை கூட்டப்பட்ட விசேட கூட்டம் ஒன்றிலும் அமைச்சர்கள், சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகள், சட்ட வரைஞர்களுடன் ஜனாதிபதி இது குறித்து நீண்ட நேரம் ஆலோசனை கலந்தார்.

கடந்த ஆட்சிக் காலங்களில் தமிழ் மக்கள் மிகவும் துன்புறுத்தப்படவும், அடக்கி ஒடுக்கப்பட்டு அவர்களது உரிமைகள் மீறப்படுவதற்கும் அடிப்படையாக விளங்கியது இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டம். அந்தச் சட்டம் 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது வரை அமுலில் இருந்தது.

தற்போது மீண்டும் அந்தச் சட்டத்தை அமுல் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

போர் நிறுத்த உடன்படிக்கை செத்துப் போய்விட்டது என்றும், தமிழ் மக்களுக்குத் தனித் தமிழீழமே ஒரே தீர்வு என்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் கூறியிருப்பதும் -

ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு

(06ஆம் பக்கம் பார்க்க)

## பிரணாப் முஹர்ஜி இலங்கை வருவார்

கொழும்பு, டிசெ.4

இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முஹர்ஜி, அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் இலங்கை வரவுள்ளார் எனத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் நடைபெற்ற 'சார்க்' மாநாட்டின்போது விடுக்கப்பட்ட அழைப்பின் நிமித்தம் அவரது கொழும்புப் பயணம் அமைகிறது என்றாலும் தனது வருகை யின்

(06ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவு முகாம் மீது ஷெல் வீச்சு

வவுணதீவு இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்து மட்டக்களப்பு வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்றுக் காலை 8.30 மணி யளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தாக்குதலை விடு தலைப் புலிகளே மேற்கொண்டனர் என்று இராணுவ ஊடக நிலையம் தெரி வித்துள்ளது. விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து உடனடி யாக இது பற் றிக் கருத்து எதுவும் தெரிய வரவில்லை. (ஐ)

## புலிகளைத் தடை செய்வதாயின் பேச்சுக்கு முடிவு கட்ட வேண்டும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கருத்து

கொழும்பு,டிசெ.4

''தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யவேண்டுமெனில் அரசு பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு யுத்தத்திற்கே செல்லவேண்டும். அவ்வாறு யுத்தத்தினால் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டால் அது முழு நாட்டுக்குமே அழிவையும், ஆபத்தையும் ஏற்படுத்தும்.''

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

''தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமெனத் தென் னிலங்கையில் வாதங்கள் தோன்றியுள்ளன. அரசு, தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்யவேண்டும் என்று தீர்மானித்தால் சமாதானப் பேச்சைத் தவிர்த்து யுத்தத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து மஹிந்த-ரணில் நாளை சந்திப்பு

கொழும்பு,டிசெ.4

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் மற்றும் சமாதான முன்னெடுப்புகள் ஆகியன குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நாளை செவ்வாய்கிழமை சந்தித்துப் பேசவுள்ளனர்.

சமாதான முயற்சிகளை எதிர்காலத்தில் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக இரு தலைவர்களும் பேசவிருக்கின்றனர்.

இந்தியாவில் தாம் மேற்கொண்ட விஜயத்தின்போது அங்கு நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடவிருக்கின்றனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின்னர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கான.தனது பத்துநாள் விஜயத்தை ஆரம்பிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (1)

## கோட்டபாய மீதான குண்டுத் தாக்குதல் நால்வர் கைது! 40 பேரிடம் விசாரணை

### தற்கொலையாளியின் கைத்தொலைபேசி மீட்பு!

கொழும்பு,டிசெ 4

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் சகோதரரும் ஆகிய கோட்டபாய ராஜபக்ஷவின் வாகன அணி மீது கொள்ளுப்பிட்டியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இதுவரை 40 பேரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

தற்கொலைக் குண்டுதாரியினுடையது எனச் சந்தேகிக்கப்படும் கையடக்கத் தொலைபேசி ஒன்றையும் சம்பவ இடத்தில் இருந்து பொலிஸார் மீட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

கோட்டபாயவின் வாகன அணி அலரி மாளிகை நோக்கிச் செல்வது பற்றிய தகவல் கையடக்கத் தொலை பேசி மூலம் தற்கொலையாளிக்கு வழங்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் விசாரணையாளர்கள் சந்தேகிக்கின்றனர்.

கைதாகி இருக்கும் சந்தேக நபர்களில் கிறிஸ்தோபர் அன்டனி பேர்னாட் என்ப

(06ஆம் பக்கம் பார்க்க)

## நாடு முழுவதிலும் மக்களை வாட்டுகிறது 'சிக்குன் குனியா!'

கொழும்பு, டிசெ. 4

நுளம்பினால் பரவும் 'சிக்குன் குனியா' நோய், இலங்கை முழுவதும் உள்ள மக்களைப் பாதித்துள்ளது. கொழும்பில் உள்ள மருத்துவமனைகள் 'சிக்குன் குனியா' நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களால் நிரம்பி வழிகின்றன.

நகரில் மட்டுமன்றி சுற்றுப்புறப் பகுதிகளிலும் இந்த நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைக்குச் செல்லும் நோயாளர்கள் இடப் பற்றாக்குறை காரணத்தால் ஒரு மருத்துவமனையில் இருந்து மற்ற மருத்துவமனைக்கு அலையும் அவலநிலைக்கும் உள்ளாகியுள்ளனர்.

சில மருத்துவமனைகளில் இந்த நோயாளிகளை அவசர சிகிச்சைப் பிரிவிலும், சத்திர சிகிச்சைப் பிரிவிலும் தங்க வைத்து

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி சபீண்டிகரண அழைப்பு



### திருமதி மகாலெட்சுமி நாகரெத்தினம்

அவர்களின் வீட்டுக் கிருத்திய வைபவம் நாளை (05.12.2006) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (55947)

நா.நாகேந்திரன்
(விரிவுரையாளர் - பலாலி ஆசிரியர் கலாசாலை).

## மரண அறிவித்தல்கள்

### யோசப் விக்ரோறியா



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் விக்ரோறியா 03.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை யோசப்பின் அன்பு மனைவியும் அன்னம்மா, அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அலெக்சாண்டர் (போக்குவரத்து முன்னாள் அதிகாரி Air Ceylon), திருச்செல்வம் (கொழும்பு), விக்டர் (ஜேர்மனி), செல்வநாயகம் (பொறியியலா - லண்டன்), மரியதாஸ் (கல்வித் திணைக்கள அதிகாரி, திருமலை), அன்ரனி தாஸ் (மலேசியா), டெய்சி, மேசி, சேவியர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற புதுமைராணி, மரியதாஸ் ராசு மற்றும் கிறேஸ்மலர், ரமணகுமாரி (லண்டன்), காமலின், கொறற்றி (கனடா), ரமணதாசன் (ஆங்கில ஆசிரியர்), ஜசிந்தா (கனடா) ஆகியோரின் மாமியும் ஜெசி (கனடா), அன்புழகன் (கணனி பொறியியலாளர், கனடா), மதியழகன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), சகுந்தலா (ஆஸ்திரேலியா),ரூபா (கனடா), டெஸ்மன் (பிரான்ஸ்), ஜொய்சி, கனிசியஸ், ஜஸ்மின், றொக்ஸி, றொடிசன், சைலா, கோகுலன், நிமலன், பிறேமானந், பிரஷானந், காயத்திரி, பிரபானந், பிரியானந், பிரவீனானந், தெரன்சன், பவித் திரா, அனிற்றா (பிரான்ஸ்), இமாக்குலேற்றா, பிரசாந்தி, ஜொபித்தா, றெஜிங்ரன், கிருசாந்தி, நிஷாந்தன், நிரோஷினி, சுகிர்தன், பிருந்தன், சிந்துஜன், அரியநேசன், டிரேசி, லைரிஷி ஆகியோரின் அன் புப் பேர்த்தியும் தாட்சாயினி, கோஷிகா, சந்தோஷ், றிஷான், கெடிலின் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2006) திங்கட் கிழமை 77^A, கோயில் வீதி, யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் புனித யுவானியார் கோவிலில் நல்ல டக்க ஆராதனைகள் நடைபெற்று, பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

77^A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 7845

தகவல்:
மருமகன், மகள்மார்.

### இளையதம்பி சுப்பிரமணியம்

கல்வியங்காடு புலவனார் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சுப்பிரமணியம் நேற்று (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஆச்சிமுத்து, கனகம்மா, வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2006) திங்கட் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக குடும்ப மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
ஏ.சடாச்சரமூர்த்தி
(இ.மி.ச.அத்தியட்சகர், சாவகச்சேரி).

### சின்னையா கணேசு

மல்லிகை, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கணேசு நேற்று (03.12.2006) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - சுந்தரி தம்பதியின் மகனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், செந்தில் வடிவேல்(ஆசிரியர், வேம்படி மகளிர் கல்லூரி) சவுந்தலாதேவி ஆகியோரின் தந்தையும் ராஜினி, கண்ணன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2006) திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

மல்லிகை,
காரைநகர்.

தகவல்:
செந்தில்வடிவேல் (மகன்).

## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் தவராசா (தவம்)

(உரிமையாளர் - பாலாகராஜ் ,சாவகச்சேரி)



நுணாவில் கிழக்கைச் சேர்ந்த மயில்வாகனம் தவராசா (02.12.2006) சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(55951) தகவல்: மனைவி, மகன்.

### கார்த்திகேசு நடராஜா

(இரத்தினம் - மண்டைதீவு - 06)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நடராஜா 03.12.2006 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கார்த்திகேசு - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் கிரிஜா, கிருபா (கனடா) காலஞ்சென்ற கீதா மற்றும் கவிதா (தபால் அதிபர் - கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கணநாதபிள்ளை, ஸ்ரீகண்டநாதன், சிவஜீவன், சிவகுமாரன் (ஆசிரியர் - தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் நிசாந்தன், நிரோஜன், நிருஷிகா, ஏகாந்தன், முகிலா, ஜெவிதன், ஜீவிதா, திருஷிகா, பேரினியாள் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3மணியளவில் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பாடசாலை வீதி,
கோண்டாவில். (55955)

தகவல்:
சி.சிவகுமாரன்,
(மருமகன்).

### திருமதி செல்லையா அன்னப்பிள்ளை

அளவெட்டியைச் சேர்ந்த அன்னப்பிள்ளை 02.12.2006 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மனோன்மணி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, உருக்குமணி, நடராசா, தியாகராசா, சிவனேசன், நாகராசா, திலகவதி, கிருஸ்ணராசா, புஸ்பவதி, மகேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், தனபாலசிங்கம், பார்வததேவி (அமரர்), ஆறுமுகதாசன், இந்திராதேவி, வள்ளிநாயகிதேவி, நாகம்மா, யோகராணி, காலஞ்சென்ற கையிலாயபிள்ளை, தவமலர், ஜெயராசா, பாரதி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.12.2006 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும்.

அளவெட்டி மேற்கு,
தம்மளை.

தகவல்:
செ.தியாகராசா (மகன்)


## சைக்கிள் கைமாறியது

எனது லுமாலா துவிச்சக்கர வண்டி 01.12.2006 வெள்ளிக்கிழமை சிவில் நிர்வாக காரியாலயத்தில் கைமாற்றப்பட்டுள்ளது. எனது துவிச்சக்கர வண்டியை ஒப்படைத்து தங்கள் துவிச்சக்கர வண்டியை மாற்றிப் பெற்றுக்கொள்ளவும்.

விஷ்னு கட்டட விற்பனையாளர் (நாலாம் சந்தி)
510, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்கள்

### சிவபாதசுந்தரம் ஞானேஸ்வரன்

(பொறியியலாளர் - நியூசிலாந்து)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் நியூசிலாந்தில் வசித்து வந்தவருமான சிவபாதசுந்தரம் ஞானேஸ்வரன் 01.12.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும் ருக்மணிதேவியின் அன்புக்கணவரும் கோகுலன், சியாமளன், மதுரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் மகேஸ்வரன் (பேராசிரியர் இரசாயனத்துறை), திருமதி குணரட்ணம் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் - K.H.C), அமரர் சுதந்திரஈஸ்வரன் (T.A) திருமதி பத்மநேசன் (ஓய்வுபெற்ற ஆசிரியை H.F.C), இராஜேஸ்வரன் (பொறியியலாளர், பரந்தன் கெமிக்கல்), திருமதி ஜெயபாலன் (ஆசிரியை V.G.H.S), திருமதி சிவானந்தராஜா (பொறியியலாளர் Brunei) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அமரர்களான கிருஷ்ணபிள்ளை - பசுபதி தம்பதியரின் மருமகனும் அமரர்களான பாலகிட்டினர் (ஓய்வு பெற்ற மேல்முறையீட்டு நீதியரசர்), கோபாலரத்தினம் (செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாணசபை), இராஜகோபால் (டாக்டர், இங்கிலாந்து) மற்றும் சுபத்திராதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை - K.H.C) இரத்தின கோபால் (பொறியியலாளர் - ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நியூசிலாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளக்கரை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
சகோதர சகோதரிகள், மைத்துனர்கள்.

தொ.பே. : 021 222 3464 (கொக்குவில்)
006495354724 (நியூசிலாந்து)

(55944)

### ஐயாத்துரை சுப்பிரமணியம் (மணிப்பத்தர்)



நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சுப்பிரமணியம் 03.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- கனகம்மா தம்பதியரின் புதல்வனும் தவமணியின் அன்புக்கணவரும் மனோகரன் (மலாவி), இந்திரா, உதயகுமார் (பிரான்ஸ்), சூரியகுமார், றஞ்சிதமலர், பவளமலர் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராசதுரையின் அன்புச் சகோதரனும் சுசிலா, தங்கராசா, சுமதி, சந்திரகலா, மனோரஞ்சன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி. (55948)

தகவல்:
இ.கணேசராசா, இ.தவராணி,
இ.பிரபா, (பெறாமக்கள்).

### சாம்பசிவம் பஞ்சலிங்கம்

(இளைப்பாறிய உப அதிபர் யா/சென். ஜோன்ஸ் கல்லூரி)

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் நாவல, கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சாம்பசிவம் பஞ்சலிங்கம் கொழும்பில் காலமானார்.

அன்னாரது பூதவுடல் A.S.றெய்மண்ட் மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு இன்று (04.12.2006) திங்கட்கிழமை மாலை கனத்தை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைர மாளிகை,
யாழ்ப்பாணம். (55953)

தகவல்:
க.முருகமூர்த்தி
Dr. க.மயிலேறும்பெருமாள் (மைத்துனர்கள்).

### கந்தையா பஞ்சலிங்கம்

(களஞ்சியப் பொறுப்பாளர்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பஞ்சலிங்கம் 03.12.2006 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (ஆசிரியர்) - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் சொர்ணபுஸ்பத்தின் அன்புக் கணவரும் சுவிற்சர்லாந்தில் வசிக்கும் காண்டீபன், துஷ்யந்தன், பார்த்தீபன் மற்றும் தமயந்தி கனடாவில் வசிக்கும் கவிதா, சந்திரிகா ஆகியோரின் தந்தையும் லலிதா, சியாமளாதேவி, ரேனுகா, Dr.K அற்புதராசா (யாழ்.போதனா வைத்தியசாலை), சிவராசா, ஐங்கரன் ஆகியோரின் மாமனும் முகேஷ்ராம்,விகாசினி, துளசிகன், மிதுசன், லஷ்மன், சுவாதி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், தில்லைராசா, மங்கையற்கரசி, தங்கமணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2006) திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'லிங்க மகால்'
தாவடி வடக்கு, தாவடி. (55952)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

### பூதப்பிள்ளை காசிலிங்கம்

(முன்னாள் சாரதி, இ.போ.ச.- பருத்தித்துறை, யாழ்ப்பாணம்)

பலாலி தெற்கு, வசாவிளானை பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை காசிலிங்கம் நேற்று (03.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2006) திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

'சுவேந்தினி பவனம்'
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
வடிவேல்நாதன் (மருமகன் - இலங்கை வங்கி யாழ்.)

## சிந்தையை நெருடும் நீங்கா நினைவலைகள்

19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.11.1936
மறைவு 04.12.1987

அமரர்
### இராசதுரை பஞ்சாட்சரம்
(ஸ்தாபகர் - அருள்முருகன் நகையகம்)

அருள் முருகன் எனும் நகையகம் ஆக்கி
அறப்பணி பலவும் ஆற்றியே நின்ற!
அன்பான தெய்வத்தை நாங்கள் பிரிந்து
ஆண்டுகள் பத்தொடு ஒன்பது ஆனதோ!

8ஆம் மாத நினைவஞ்சலி



பிறப்பு 11.01.1970
இறப்பு 13.04.2006

அமரர்
### பஞ்சாட்சரம் கிருபாகரன்
(உரிமையாளர் - சாரங்கன் நகைமாடம்)

தந்தையின் பணியினைத் தாங்கியே தொடர்ந்து
முந்தியே செயல்கள் முனைப்புடன் முடித்து
அந்திபகலாய் எமை அரவணைத்த செம்மலே
வஞ்சகர் செயலால் [illegible]

கண்டி வீதி,
சாவகச்சேரி. (55933)

- குடும்பத்தினர்.

### பாலையூற்றில் சுட்டுக்கொலை!

திருகோணமலை பாலையூற்று அந்தோனியார் வீதியில் வைத்து நேற்று நண்பகல் 12.30 மணியளவில் குடும்பப் பெண் ஒருவர் இனந் தெரியாத ஆயுத தாரிகளினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர் பாலையூற்றைச் சேர்ந்த பாக்கியநாதன் கனிஷ்டா நிர்மலாதேவி (வயது-46) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் தனது வீட்டை அடுத்துள்ள கடையொன்றில் பொருட்களை கொள்வனவு செய்துவிட்டு வீடு திரும்புகையில் முச்சக்கர வண்டியில் வந்தவர்கள் சிலர் இவரை [illegible] சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நெஞ்சை விட்டகலாத
ஏழாண்டு நினைவஞ்சலி

## தேவராசா நிவேதன்

திதி: 04.12.2006 - [திங்கள்]



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27 - 04 - 1995 | 22 - 11 - 1999 |

பொங்கிவரும் கண்ணீரில் ஏழாண்டு போனாலும் - உன்
தங்கமுகம் எம்மனத்தில் நீங்காதிருக்குதையா
ஏங்கியழும் எம்மைவிட்டு இறைவனடி சேர்ந்தாலும் - நாம்
அங்கிருக்கும் உன்னாத்மா சாந்திபெறவேண்டுகிறோம்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(55774)

அம்மா, அப்பா,
சகோதரர்கள்.


## தென்மராட்சியில் குடும்ப அட்டை மீளாய்வு

தென்மராட்சி,டிசெ.4

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் எதிர்வரும் வியாழக்கிழமை பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

சாவகச்சேரி நகரம் (ஜே/300), சங்கத்தானை (ஜே/302), நுணாவில் கிழக்கு (ஜே/306), நுணாவில் மத்தி (ஜே/307), மீசாலை கிழக்கு (ஜே/318), மீசாலை மேற்கு (ஜே/319) ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே மீளாய்வு நடைபெறவுள்ளது. (202)

## மானிப்பாயில் பெற்றோல் விநியோகம்

நவாலி,டிசெ.4

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் தற்போது வாகனங்களுக்கு பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.(202-100)

## மானிப்பாயில் நானாவிதப் பொருள்கள் விநியோகம்

மானிப்பாய் விற்பனைத் திணைக்களத்தில் பங்கீட்டு அட்டைக்கு அரிசி, சீனி, மா, பருப்பு, மீன்ரின், மிளகாய், மல்லி போன்ற பொருள்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (202-100)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

836 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 03 06 32 44

01-12-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5570527 - 5584907

ஜக்பொட் பரிசு ரூபா. 6,122,875/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 315,857 | 10/- | 3,158,570/- |
| 2 இலக்கங்கள் | 29,028 | 20/- | 580,560/- |
| 1 இல. + லக்கினம் | 28,746 | 30/- | 862,380/- |
| 2 இல. + லக்கினம் | 2,596 | 100/- | 259,600/- |
| 3 இலக்கங்கள் | 767 | 500/- | 383,500/- |
| 3 இல. + லக்கினம் | 69 | 5,000/- | 345,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,122,875/- | - |
| மொத்தம் | | | 5,989,610/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 377,072 | | 7,013,110/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 6,475,525/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

| | |
|---|---|
| கம்பஹா | 5581408-6-76 |
| பொலன்னறுவை | 5571224-8-71 |
| களுத்துறை | 5584119-4-59 |
| புத்தளம் | 5580393-4-67 |
| கேகாலை | 5577718-6-03 |


## அடுத்த ஆண்டுக்கான ஓய்வூதியத் திகதிகள் அறிவிப்பு

ஓய்வூதியம் பெறுவோருக்கு அடுத்த ஆண்டில் வழங்கப்படவுள்ள ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் திகதிகள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனவரி 11ஆம் திகதி, பெப்ரவரி 8ஆம் திகதி, மார்ச் 8ஆம் திகதி, ஏப்ரல் 5ஆம் திகதி, மே 10ஆம் திகதி, ஜூன் 12ஆம் திகதி, ஜூலை 12ஆம் திகதி, ஓகஸ்ட் 9ஆம் திகதி, செப்ரெம்பர் 12ஆம் திகதி, ஒக்ரோபர் 4ஆம் திகதி, நவம்பர் 7ஆம் திகதி, டிசெம்பர் 4ஆம் திகதி ஆகிய தினங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-11)


HND HND HND HND HND

edexcel INTERNATIONAL → BTEC HND

World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally



B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved "A" Grade Training Centre

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் ( Admission ) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் உலகில் பிரபல்யமான BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.

IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk


# கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.அ.துரைராஜா அவர்களின் சேவை நயப்பு சிறப்பு மலர் - 04.12.2006

## அருணாசலம் துரைராஜா (Sp-Science Trd, S.L.T.S.-1)
### விஞ்ஞானபாட இணைப்பாளர், பகுதித்தலைவர்.



ஆரம்பக் கல்வி: மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்.
உயர்கல்வி: கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்.
தொழிற்கல்வி: ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி.

**சேவைவிவரம்:**

21.03.1972-20.05.1973 அ/கொல்லன் குட்டிகம அரசினர் முஸ்லிம் வித்தியாலயம்.
21.05.1973-31.01.1974 யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்.
01.02.1974-31.12.1977 யா/நாவாந்துறை மகா வித்தியாலயம்.
01.01.1978-31.12.1979 ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி.
01.01.1980-30.04.1986 சிலா/சென்.பேர்ண்தேத் தமிழ் மகா வித்தியாலயம்.
01.05.1986-04.12.2006 யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

## விஞ்ஞான ஆசிரியர் திலகம்



திரு.அ.துரைராஜா அவர்கள் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக எமது பாடசாலையில் 20 வருடங்களாகக் கடமையாற்றியுள்ளார்.

விஞ்ஞான பாடத்தில் ஆழ்ந்த அறிவும் சிறந்த கற்பிக்கும் முறையும், க.பொ.த. சாதாரண தரத்தின் விஞ்ஞான பாடத்தின் பரீட்சகர், சிரேஷ்ட பரீட்சகராகப் பல வருடங்கள் கடமையாற்றிய அறிவும் அவரை முழுமையான சிறந்த விஞ்ஞான ஆசிரியராக மாற்றியது என்பது மிகையாகாது.

மாணவர்களால் மிக விரும்பப்படும் ஒருவராக அவர் திகழ்ந்தார். எமது பாடசாலையில் 20 வருடங்களாகக் கற்பித்தது எமது பாடசாலைக்குக் கிடைத்த சிறந்த பேறு எனலாம். அவரை வேறு பாடசாலை மாணவர்களும் விரும்பி அவரது உதவியைப் பெற்றுக் கொண்டார்கள். இவரது முப்பது வருட சேவையில் சிறந்த பல அறிவாளிகளை உருவாக்கிய பெருமை இவரைச்சாரும்.

அதிபருடனும் ஆசிரிய நண்பர்களுடனும் அன்புடன் பழகுவதிலும் தனது கடமையைச் சரிவரச் செய்வதிலும் அவருக்கு நிகர் அவரேயாகும். அவரது ஓய்வுகாலம் அவர்தம் குடும்பத்தவருடன் சீரும் சிறப்புமாக அமைய ஆசிரியகுழாம் வாழ்த்துவதுடன், அருள் பொழிய இறைவனை வேண்டுகிறோம்.

க.வேலாயுதம்
தலைவர், ஆசிரியர் கழகம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

## விஞ்ஞானம் கற்பித்தலில் முத்திரை பதித்த ஆசிரியர்.....



திரு.துரைராஜா அவர்கள் தனது அரச ஆசிரியர் சேவையில் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அரும்பணியாற்றி தனது ஐம்பத்தொன்பதாவது வயதில் இளைப்பாறுகின்றார். எமது கல்லூரியில் சிறந்ததொரு விஞ்ஞான ஆசிரியராக, பாட இணைப்பாளராக, பகுதித்தலைவராக செவ்வனே தனது பணிகளை நிறைவேற்றிய கடமையுணர்வுடைய ஓர் ஆசிரியரின் பணியை எமது கல்லூரி இன்றுடன் நிறைவுசெய்கின்றது. கல்லூரித் தவணைப் பரீட்சைகளின்போது பரீட்சை இணைப்பாளராக அவரது பணி சிறப்புற அமைவது வழமை. அவரது விஞ்ஞான பாடக் கற்பித்தல் மாணவர் உட்பட கல்விச் சமூகத்தால் பெரிதும் விரும்பப்படுகின்றது. பாடசாலைகளுக்குப் பல ஆசிரியர்கள் பணிக்காக வருவதும் போவதும், இளைப்பாறுவதும் வழமையானது. ஆனாலும் சிலர் மட்டுமே தாம் சார்ந்த பாடத்துறையில் நிபுணத்துவ ரீதியாக முத்திரை பதித்துச் செல்லுகின்றனர். அந்த வகையில், திரு.துரைராஜா அவர்களும் விஞ்ஞானத்துறையில் முத்திரை பதித்தவர் என்றால் அது மிகையல்ல. அவரது ஓய்வுக்காலம் அவர்தம் குடும்பத்தவருடன் சீரும் சிறப்புமாக அமைய எமது கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துவதுடன் அருள் கிடைக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

S.V.மகேந்திரன்
பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.

## அதிபரின் வாழ்த்துச் செய்தி



ஆசிரிய சேவையில் 34 ஆண்டுகள் பணியாற்றி இன்று ஓய்வுபெறும் நல்லாசான் திரு.அருணாசலம் துரைராசா அவர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் இருபது ஆண்டுகள் நற்பணி ஆற்றிய பெருமைக்குரியவராவார். இவர் தரம் 10, 11 மாணவர்களுக்கு விஞ்ஞானபாடத்தைக் கற்பிப்பதில் சிறப்புத் தேர்ச்சிபெற்று விளங்கியதுடன், மாணவர்களைச் சிறந்த பெறுபேறுகள் பெறச்செய்த நல்லாசிரியருமாவார். எமது கல்லூரியில் ஆசிரியப் பணியுடன் தர இணைப்பாளர், பாட இணைப்பாளர், பகுதித்தலைவர் போன்ற பொறுப்பான பதவிகளையும் இவர் வகித்ததன் மூலம் கல்லூரி நிர்வாகத்திற்கும் பெருமளவில் உதவியவர். மாணவர் மத்தியில் நல்லாசிரியர் என்ற பெயரைப் பெற்றிருந்த இவர், என்றுமே மாணவர்களுக்கு நல்வழிகாட்டுபவராகவும், ஆலோசனைகள் வழங்குபவராகவும் திகழ்ந்தவர்.

எமது கல்லூரியில் நீண்டகாலம் பணியாற்றியமையால் கல்லூரிப் பாரம்பரியத்தை நன்கறிந்திருந்ததுடன், அதற்கேற்ப மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாட்டினைச் சிறப்பாகவும் சாதுரியமாகவும் நடைமுறைப்படுத்தியவர். இவரிடம் நான் கண்ட சிறப்பு யாதெனில் ஓய்வுபெறும் இறுதிநாள்வரை தனது கற்பித்தற்பணியையும் மற்றும் கடமைகளையும் பொறுப்போடு செய்துவந்தமையாகும்.

இவர் எமது கல்லூரியில் மூன்று அதிபர்களின் சேவைக்காலங்களில் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றிருந்தவர். தான் பெற்றிருந்த அனுபவத்தின் வாயிலாக அவ்வப்போது கல்லூரி நிர்வாகத்திற்கும், எனக்கும் நல்ல ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வழங்கி வந்திருந்தார்.

இவர் சேவையிலிருந்து இளைப்பாறுவது மாணவ சமுதாயத்திற்கும், கல்லூரிக்கும் பேரிழப்பாக இருப்பினும் ஓய்வுபெறுதல் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இவர் செய்த நற்பணியின் பயனாக இவரது ஓய்வுகாலம் சிறப்புற அமையும் என்பதில் மிகுந்த நம்பிக்கை எமக்குண்டு. அந்தவகையில் இவரது ஓய்வுக்காலம் நலமாகவும், மகிழ்வாகவும் அமையவேண்டுமெனவும், இவரது குடும்பம் சீரோடும், சிறப்போடும் வாழவேண்டுமெனவும் இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி.

## நல்லாசான்



நல்லாசானை என்றும் மாணவர்களும் சமூகமும் மதிக்கத்தவறுவதில்லை. அவ்வாறே திரு.துரைராஜா அவர்களும் கல்லூரிச் சமூகத்தின் நன்மதிப்பினைப் பெற்ற ஒருவராவார். கொக்குவில் இந்துவில் நான் சேவையாற்றிய காலப்பகுதியில் எம்முடன் இணைந்த ஆசிரியர்களில் திரு.துரைராஜா அவர்கள் சிறந்து விளங்கினார். நல்ல பாட அறிவும் அதனை மாணவர்களுக்குப் போதிக்கும் திறனும் அமைதியான போக்கும் பொறுமையான சுபாவமும் பிள்ளைகளின் பால் கொண்ட கரிசனையும் அவரைத் தனது விஞ்ஞானத் துறையில் மேலோங்க வைத்தன.

திரு. துரைராஜா அவர்களின் துறைசார் ஆற்றல் அவரை ஒரு பகுதித்தலைவராக உயர்த்தியது. மேலும் அவரை ஓர் இல்ல ஆசிரியராகவும் செயற்படவைத்தது.

ஒருவர் இளைப்பாறியதும் அவர் பல தசாப்தங்களாகப் பெற்ற அனுபவங்கள் சமுதாயத்திற்கு எவ்வழியிலும் பயனற்றுப் போகின்றன. அவ்வாறல்லாது திரு.துரைராஜா அவர்களின் அனுபவங்கள், ஆற்றல்கள் எமது சமுதாயத்திற்குப் பயனடையக்கூடிய வகையில் அமைய வேண்டும் என்பது எனது பிரார்த்தனையாகும்.

திரு.துரைராஜா அவர்கள் நீடூழி வாழ்ந்து சமூகத்திற்கும் தனது குடும்பத்திற்கும் உதவவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

அ.பஞ்சலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வரத்தினம் சிறீதரன்**

திதி: சதுர்த்தசி 04.12.2006

மலர்வு 05.07.1970 உதிர்வு 07.12.2003

உடம்பை விட்டு உன் ஆவி
பிரிந்தாலும்
நம் நெஞ்சை விட்டு நீங்கிடுமோ
உன் எண்ணம்
நீ இறக்கவில்லை மகனே எங்கள்
கண்ணில் காலமெல்லாம்
மலர்ந்து கொண்டேயிருப்பாய்.

உன்னை என்றும் மறவாத
அப்பா, மனைவி, மகள்,
சகோதர, சகோதரிகள்.

4ஆவது மைல் கல்,
கே.எஸ் வீதி,
கோண்டாவில் மேற்கு. (55922)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**கந்தையா சந்திரசேகரம்**

(இ.போ.ச.சாரதி, S.N.J.Driver)

மண்ணில் ஒளி வீச 05.11.1936 விண்ணில் பிரகாசிக்க 08.12.2003

மூன்று ஆண்டு நினைவுக ளுடன் என்றும் இறைவ னைப் பிரார்த்திக்கும்.

"முரளி வாசா",
இல 114, ப.ம.திட்டம்,
மிருசுவில். (55918) குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**செல்வி நீரஜா கானமூர்த்தி**

மலர்வு 06.10.1982 உதிர்வு 03.11.2006

தெய்வமே!
ஏன் எங்கள் அன்புச் செல்வத்தை
எம்மிடமிருந்து பறித்துக் கொண்டாய்?
என்ன தவறு செய்தோம்?
என்ன குறை கண்டாய்?
ஆறாதே மனம் தேறாதே!

எம் அன்புச் செல்வத்தைப் பிரிந்த துயரில் நேரில் வந்து
பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமுவந்த
நன்றிகள்

104/1, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (55909)

ச.கானமூர்த்தி (தந்தை - லண்டன்)
ச.ஜெயச்சந்திரன் (சிறிய தந்தை)

## முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்

**ஸ்ரீபத்மநாதன் ஸ்ரீ விஜயகுமார்**

திதி பூரணை (04.12.2006)

தோற்றம் 05★11★1957

மறைவு 15★12★2005

விண்ணில் பூரண நிலவில் மண்ணில் கார்த்திகை
தீபங்கள் மின் ஒளிபரப்ப நீங்கள்
விண்ணுலகம் சென்றீர்கள் ஐயா!
உங்கள் பாசமிகு உறவுகள் இருட்டில் தவிக்க
விட்டுச் சென்றதேனோ? இன்னமும் ஏங்கித்
தவிக்கின்றோம் ஐயா!

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. (55874) குடும்பத்தினர்.

## இருபத்தோராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 ★ 12 ★ 1924



மறைவு 04 ★ 12 ★ 1985

அமரர் E.K. **சண்முகநாதன்**

(முன்னாள் கல்வி அதிகாரி)

குடும்பத்தின் குல விளக்காய் நம் அன்புத் தெய்வமாய்
என்றும் மறவாத அன்புடன் எம்மை அரவணைத்து
எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தந்தையே! எம் உள்ளம் உள்ளவரை
மறையாது உங்களின் நினைவுகள்!

தாரங்கி,
137, பலாலி வீதி,
திருநெல்வேலி. (55798)

என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் (லண்டன்)


## தேவை

கல்பேட், ஊர்க்கோழிகள் உடன்
தேவை. 1கி.கி. 450/=, 500/=
இடையில் கொள்வனவு செய்யப்படும்.
158/4, தாசன் பாம்,
கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(ICRC சந்திக்கும் கைலாசபதி கோயிலுக்குமிடையில்)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி
மகேஸ்வரி சர்வேஸ்வரசெல்வேள்
அவர்களின் அன்புத் தாய்

**பொன்னுச்சாமி நாகம்மா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
அவரின் குடும்பத்தவர்களுக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ சுதுமலை சிந்மய பாரதி
வித்தியாலய சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி



**திரு. த.ஜெயராஜா**

(உரிமையாளர் -ஜெயா புக் சென்டர்,
ஜெயா ஏஜென்சி)

அன்னாரை இழந்து தவிக்கும் அன்னாரது குடும்ப அங்கத்த வர்கள், நிறுவன ஊழியர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்,
ஸ்ரீலங்கா புக் டிப்போ,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

**தம்பிராஜா ஜெயராஜா**



காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகவும் இல.4, விவேகானந்தா அவனியூ வெள்ளவத்தை, கொழும்பு - 06 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கொழும்பு ஜெயா புக் சென்டர், ஜெயா ஏஜென்சி ஆகியவற்றின் உரிமையாளருமான தம்பிராஜா ஜெயராஜா 01.02.2006 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை- நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும் தர்ஷனா, ரகுவரன், சர்மிளா ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகராஜா, திருமதி தாட்சாயிணி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.12. 2006) திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு ஈமக்கிரியைகளின் பின்னர் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சந்திராதேவி.
(மனைவி)

இல.4, விவேகானந்த அவனியூ,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
தொ.பே.: 2366166 (சி/51447)


## புதுக்கடை திறப்பு விழா

அன்புடையீர்,

சுபமங்களம் நிறைந்த வியவருடம் கார்த்திகைத் திங்கள் 18ஆம் நாள் (04.12.2006) திங்கட்கிழமை கார்த்திகை நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய 12.15 மணி தொடக்கம் 1.45 மணி வரையுள்ள சுப மூகூர்த்த வேளையில் திறப்பதற்குத் திருவருள் கூடியுள்ளது.

"நியூ வெல்கம் ஜுவலர்ஸ்"

என்னும் எமது புதிய ஸ்தாபனத்தைத் திறந்து வைக்கும் வைபவத்திற்குத் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

இல.56, கொழும்புத்துறை வீதி,
சந்தன மாதா கோயில் முன்பாக,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம். (55938)

உரிமையாளர்.
திரு.செ.வரதராஜா
(அபிநயா ஜுவலர்ஸ்
முன்னாள் கணக்காளர்)


## மரண அறிவித்தல்

**சீனிவாசகம் திருநாவுக்கரசு**

விழிசிட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் திருநாவுக்கரசு 30.11.2006 இலண்டனில் சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை (09.11.2006) இலண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

44/3A, மனல்தரை வீதி,
கந்தர்மடம். தொ.பே.: +441162767393 (55924)

தகவல்:
சோதிமுத்து (சகோதரி).

## கண்ணீர் அஞ்சலி



30.11.2006 ஆம் திகதி அகாலமரணமடைந்த எமது சக உத்தியோகத்தர்

அமரர்

**கியூபேட் ஆனந்தராசா**

(கிராம அலுவலர், J/70)

அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள், சகோதரி மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம். (55911)

பிரதேச செயலரும்,
உத்தியோகத்தர்களும்.

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 15 01 1944



மறைவு 30 11 2001


**அமரர் கந்தையா பன்னிருகரம்**

ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஆண்டவன் நினைவில் இருந்தாலும்
நீங்காத நினைவுகள் எம்மனதில்
நித்தம் நித்தம் ஏங்கும் உள்ளங்கள்
பார்க்கும் இடமும் உங்கள் உருவம்
கேட்கும் ஒலியும் உங்கள் ஒலியே!

'சாந்தி பவனம்',
கொற்றாவத்தை,
கரவெட்டி. (55741) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 26 * 07 * 1930



விண்ணில் 15 * 12 * 2005

அமரர் **செல்லன் பொன்னுத்துரை**

திதி: 04.12.2006

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது எம் துயரம்
தீராது ஐயாவே எம் சோகம்
ஆறாது ஆறாது எம் சோகம்
எம் குல விளக்கின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அல்லின்வீதி,
பெருநெற்றாழ்வு,
காரைநகர். (55941)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## சமாதான விரும்பிகளே, என் செய்வீர்?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்வது குறித்து அரசாங்க உயர்மட்டங்களில் ஆராயப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து மிகத் தீவிரமாக ஆராயப்பட்டிருக்கிறது. வன்முறைகளைக் கைவிடுமாறு நிபந்தனை விதித்துத் தடையைக் கொண்டுவருவதில் அரசு முனைப்பாக உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், உடனடியாக அவ்வாறு செய்வதில்லை என்று முடிவாகியதாக அறியப்படுகின்றது.

ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய பேரினவாதக் கடுங்கோட்பாட்டுக் கொள்கைக் கட்சிகள், விடுதலைப் புலிகளை உடனடியாகவே தடைசெய்யவேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. ஜாதிக ஹெல உறுமய தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் விதத்தில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமும் ஊர்வலமும் நடத்தியது.

அரசாங்கத்தின் முடிவு உடனடியாக வெளிப்படுத்தப்படுமா அல்லது தாமதித்து வருமா என்பதல்ல முக்கியம். விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்வது குறித்து அது பரிசீலனை செய்கிறது என்பதே கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயம்:

விடுதலைப் புலிகள் அமைப்பின்மீது தடை விதிப்பது என்பது, இப்போது சிறுகிக் குறுகி, நொறுங்கியுள்ள கதவுடன் உள்ள சமாதானப் பாதையை, ஒரேயடியாகப் பூட்டிட்டு மூடிவிடுவது என்பதே ஆகும். அதன் பின்னர் போரை முழு அளவில் நடத்தி ஒரு 'முடிவு' கண்டாக வேண்டும் என்ற மூர்க்கத்துடன், ஆவேசத்துடன் எடுக்கப்படும் தீர்மானம் அது.

விடுதலைப் புலிகளைத் தடை செய்தால் அவர்களுடன் எப்படிப் பேசுவது? பயங்கரச் சண்டையிடும் எதிரிகள் இருவர் மேசையில் அமர்ந்து பேசுவதற்கான சூழல் அறவே இருக்கமாட்டாது. அதுவும் அடுத்தவர் தீண்டத்தகாதவர், பொல்லாதவர் என்று முத்திரை குத்திய நிலையில் இருவரும் நேருக்குநேர் முகம் பார்த்துப் பேச இயலுமா? அது அசாத்தியமானது.

1988ஆம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீது அப்போதைய அரசாங்கம் தடை விதித்தது. அதன் பின்னர் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் திருப்புமுனையை உண்டாக்கிய போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர் தடை நீக்கப்பட்டது.

அவ்வாறு செய்யப்பட்டதாலேயே அரசும் புலிகளும் சமதரப்பாக இருந்து கடந்த நான்கு வருடங்களாகப் பேச்சுவார்த்தைகளை நடத்த முடிந்தது.

பேச்சுவார்த்தைகள் எதிர்பார்க்கப்பட்ட பலனை - விளைவை - தரவில்லையெனினும் அவை உத்தியோக பூர்வமாகவும் ஒரு தரப்புக்கு அடுத்த தரப்பு மதிப்பளிக்கும் பண்புடனும் நடைபெற்றன.

தடைசெய்யப்பட்ட நிலையில் இருந்துகொண்டு சமாதானப் பேச்சு மேசைக்கு விடுதலைப் புலிகள் செல்வார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

தடையின் விளைவாக நாடு முழுவதிலும் மக்கள் அழிவும் உடைமை அழிவும் உண்டாகி அது சீரழியும் என்பது எவருக்குமே - எல்லோருக்குமே - தெரிந்ததே.

அரசும் விடுதலைப் புலிகளும் எதிரும் புதிருமாகக் கடுப்பான முகங்களைக் காட்டிக்கொண்டு பேசுவது துர்லாபம். இரு தரப்புகளும் தனித்துப் பேசித் தீர்வு ஒன்றைக் காணமுடியாது. முந்தைய அனுபவம் அதுவே. இதனை உணர்ந்தே நோர்வேயை அனுசரணையாளராக அழைத்துப் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார் சந்திரிகா.

ஆனால், சந்திரிகாவும் வெளிநாடுகளில் இருந்து நிதி உதவி பெறுவதற்காகச் சமாதான வேடம் பூண்டவரே.

இடையில் ரணில் வந்தார். போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை விடுதலைப் புலிகளுடன் செய்ய விரும்பினார். அதற்கு ஏதுவாக அவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கி சமாதானப் பேச்சுக்கான சுமுகமான பின்புலத்தையும் மேடையையும் அமைத்தார்.

எனினும், அவரது சில தந்திரங்களும் குள்ளநரித்தனங்களும் பேச்சு விரைந்து ஆக்கபூர்வமான முடிவை எட்டுவதற்குத் தடைக்கல் போட்டன.

இவை தற்கால வரலாறாகிவிட்டவை.

இவ்வாறிருக்க -

விடுதலைப் புலிகள் மீது தடை விதிப்பதற்கு அரசு தயாராகிறது என்ற தகவல் -

'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற சந்திரிக்காவின் உளுத்துப்போன, 'சித்தாந்தத்'தை அடியொற்றியே, மஹிந்தரும் நாட்டை மேலும் சீர்கெடுத்தப்போகிறார் என்பதற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

இப்போது தான் பரிசீலனை செய்து வருவதை அரசாங்கம் முடிவாக்கி, அமுலாக்கும்போது போர்நிறுத்த ஒப்பந்தம் அர்த்தமற்றதாகி விடும்; செத்துப்போய்விடும்.

அதன் பின்னர் முழு அளவிலான போர்மூண்டு எல்லா வகைகளாலும் பேரழிவுகள் உண்டாகும். சமாதானப் புறா கொல்லப்பட்டுக் குழி தோண்டிப் புதைக்கப்படும்.

நாட்டின் சமாதான விரும்பிகள் அதன் பிற்பாடு என்ன செய்யமுடியும்? ஆபத்து வருமுன் தடுப்பதே சிறந்தது.

அதனைச் செய்ய வேண்டியவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு சமாதான விரும்பிகளே. வெளிநாடுகளுக்கு இதில் முக்கிய - பெரிய - பங்குண்டு. அந்தப் பங்கினை ஆற்றுவார்களா அவர்கள்?

### மிக் ரக விமானக் கொள்வனவில்

# அரசின் கண்களில் மண் தூவி மீண்டும் பலகோடி ரூபா ஊழல்!

கொழும்பு,டிசெ.4

இலங்கை அரசு தனது விமானப் படைக்கென அண்மையில் பலகோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்த நான்கு மிக் 27 ரக விமானங்கள் மற்றும் ஏற்கனவே விமானப் படையின் பொறுப்பில் உள்ள ஏழு விமானங்களைப் பழுதுபார்ப்பதற்கான பொருள்கள் வாங்கிய வகையிலும் பாதுகாப்பு அமைச்சின் கண்ணில் மண் தூவப்பட்டு நிதி மோசடி செய்யப்பட்டிருப்பதற்கான சந்தேகம் எழுந்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தனது புலனாய்வு நடவடிக்கைகள் மூலம் கண்டுபிடித்திருப்பதாக அறிவித்துள்ளது.

இம்மாதிரி கொள்முதல்கள் 'அரசுக்கு அரசு' என்ற வகையிலேயே செய்து கொள்ளப்படுவது வழக்கம். மூன்றாம் தரப்புகள் தரகர்களாக தலையிட்டு கோடிக் கணக்கில் தரகுப் பணம் பெறுவதைத் தடுப்பதே இதன் நோக்கம். ஆனால், அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தக் கொள்முதல் தொடர்பாக அரசு தவறாக வழிநடத்தப்பட்டிருப்பதாகச் சந்தேகம் எழுந்துள்ளது.

கொள்முதல் செய்யப்பட்ட நான்கு மிக் 27 ரக விமானங்களின் விலை மற்றும் கொண்டுவருவதற்கான செலவு ஆகியவை நேரடியாக இந்த விடயத்தில் தரகுசெய்த நிறுவனத்துக்குப் போய்ச் சேருமென கருதப்படுகின்றது.

பொலிஸாருக்கும் ஆயுதப்படையினருக்குமான ஆயுதங்களை கொள்முதல் செய்வதற்கான லங்கா லொஜிஸ்டிக் மற்றும் ரெக்னோ லொஜிக்கல் நிறுவனம் நடைமுறைக்கு வந்த ஜூலை 27ஆம் திகதிக்கு ஒரு நாள் முன்பதாக இந்தக் கொள்முதல் நடந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

## சூரசம்ஹார பெருவிழா

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய விநாயக விரத கஜமுகா சூரசம்ஹார பெருவிழா நாளை செவ்வாய்கிழமை ஆரம்பமாகி 25ஆம் திகதி வரை 21 நாள்கள் இடம்பெறவுள்ளது.

இதனையொட்டி தினமும் முற்பகல் 10 மணி முதல் விசேட அபிஷேகம், பூசை, புராணப் படிப்பு என்பன இடம்பெறுவதுடன் 24ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சூரசம்ஹார விழா இடம்பெறும்.
(202-100)

## பூரணை விழா

யாழ்ப்பாணம்,டிசெ.4

தாவடியில் அமைந்துள்ள ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமத்தினர் நடத்தும் கார்த்திகைப் பூரணை விழா இன்று காலை 9.30 மணிக்கு சேவாச்சிரமம் இயங்கும் தாவடி இ.த.க. பாடசாலையின் பழைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பஜனையைத் தொடர்ந்து 'ஜீவ சேவையே சிவசேவை' என்ற பொருளில் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமச் செயலாளர் சி.சிவமோகனின் சிறப்பு உரையும் இடம்பெறவுள்ளது. (1-203)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.4

யாழ். சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று காலை 9 மணி முதல் போயா தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

'பஜனை, 'கைலாஸ் மானசொருபன்' படக்காட்சி உட்படப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (1)

## சிக்குன்குனியா பரவுவதைத் தடுக்கும் பணி

குருநகர்,டிசெ.4

குடாநாட்டில் சிக்குன்குனியா நோய் பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினரும் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைய தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தெரிவித்தார்.

ஆயினும் தடுப்பு நடவடிக்கைக்குத் தேவையான மருந்து வகைகள் சங்கத்திடம் போதியளவு இல்லை தேவையான மருந்துகளை தந்துதவுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளரைத் தாம் கோரியுள்ளதாகவும் கிளைத் தலைவர் மேலும் தெரிவித்தார். (202-51)

## வரணி குடியிருப்புகளில் கூரைத் தகடுகள் திருட்டு

தென்மராட்சி,டிசெ.4

வரணி இடைக்குறிச்சி மேற்குப் பகுதியில் பெருமளவு குடியிருப்புகளின் கூரைத் தகடுகள் மற்றும் கூரை மரங்கள் திருட்டுப் போகின்றன என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையால் அப்பகுதி மக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து இன்னமும் மீளக்குடியமரவில்லை. இந்நிலையில் அங்குள்ள பல குடியிருப்புகளின் கூரைத் தகடுகள், கூரை மரங்கள், கைவிட்டுச்சென்ற பாத்திரங்கள் உட்பட பல பொருள்கள் திருட்டுப் போவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (202)

## நாளை

கார்த்திகை 19
செவ்வாய்க்கிழமை
05.12.2006
திதி : பூரணை
காலை : 06.29
நட்சத்திரம் : ரோகிணி
[illegible]
[illegible]
ராகுகாலம் : 03.16 - 04.46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆயர் நேற்று யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,டிசெ.4

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆயர் அதிவண கலாநிதி டானியல் தியாகராசா யாழ்ப்பாணத்துக்கு,நேற்று வருகை தந்தார்.

ஜனாதிபதி செயலகத்தின் பணிப்பின் பேரில் விமானம் மூலம் பலாலி வந்தடைந்த ஆயரை யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி வரவேற்றார்.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் சார்பாக சிரேஷ்ட பொலிஸ் அதிபர் விக்கிரமரத்தினவும் இதில் கலந்துகொண்டார்.

அதன் பின்னர் வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் நடைபெற்ற திருவருகைக் கால சிறப்பு வழிபாட்டில் ஆயர் கலந்துகொண்டார்.

இவ்வழிபாட்டின் ஆரம்பத்தில் யாழ். திருமண்டலத்தின் முதல் மூன்று பேராயர்களும் அதிகாரபூர்வமாக உபயோகித்த 'பேராயரின் கோல்' மூன்றாவது பேராயரான அதிவண கலாநிதி எஸ். ஜெயபநேசனால் ஆயரிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

பலகுருமார் சூழ நிற்க புதிய ஆயர் பேராயர் ஆசனத்தில் அமர்த்தப்பட்டார். வழிபாடுகளை அடுத்து கலாநிதி ஜெபநேசன் சிறப்புரையாற்றினார். புதிய ஆயர் பதிலுரையாற்றினார்.

(அ-1)

## தமிழ்ப் பெண் ஊடகவியலாளரை விடுவிக்குமாறு வலியுறுத்தல்

கொழும்பு, டிச.4

கடந்த ஒரு வார காலத்துக்கும் மேலாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர் பரமேஸ்வரி முனுசாமியை விடுவிக்க வேண்டும் அல்லது முறையான குற்றச்சாட்டைச் சுமத்த வேண்டும் என ஊடகவியலாளர் பாதுகாப்புக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சிங்கள வாரப் பத்திரிகையான 'மாவ்பிம'வுக்குச் சுதந்திரச் செய்தியாளராக எழுதி வரும் பரமேஸ்வரி கடந்த மாதம் 24 ஆம் திகதி கொழும்பில் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவருடன் மற்றொரு தமிழ்ப் பெண்ணும் கைது செய்யப்பட்டார் என சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருக்கும் அவரை காலவரையின்றித் தடுப்புக் காவலில் வைத்திருக்க சட்டம் அனுமதிக்கிறது.

அவரைக் கைது செய்வதற்கு எவ்வித காரணமும் இல்லை. நடுநிலையான பத்திரிகை என அறியப்படும் 'மாவ்பிம', ஸ்ரீலங்கா அரசு, விடுதலைப் புலிகள் ஆகிய இரண்டையும் விமர்சித்துத் தலையங்கம் எழுதியிருந்தது.

இனப்பிரச்சினை குறித்து எழுதி வருதால் பரமேஸ்வரி கைது செய்யப்பட்டிருக்கலாம் என அவருடன் பணியாற்றும் சக ஊழியர்கள் தெரிவித்தனர்.

பரமேஸ்வரி ஏன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் எனக் கேட்க அதிகாரிகளை அழைத்தோம் என்று 'மாவ்பிம' நிர்வாக இயக்குநர் ஜோல் சைமன் கூறினார்.

''தமிழ் ஊடகவியலாளர்கள் தமிழர்களாக இருப்பதாலோ அல்லது அரசியல் தொடர்புகளாலோ அல்லது அவர்களது செய்திகளினாலோ அவர்கள் அடிக்கடி துன்புறுத்தப்படுகிறார்கள்.

வன்முறைகள் அதிகரித்து வரும் இந்தச் சூழலில், உண்மையான தகவல்களைத் தர முடியாமல் இத்தகைய நடவடிக்கைகள் இலங்கையின் அனைத்து ஊடகவியலாளர்களையும் கட்டிப் போடுகிறது - என அவர் கூறினார்.

(ஐ)

## கார்த்திகைத் தீபத் திருநாள்

கார்த்திகை மாதத்தில் வரும் பௌர்ணமி தினத்தன்று கார்த்திகைத் தீபத் திருவிழா இந்துக்களால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்நாளை ஆறுமுகப் பெருமானான கந்தக் கடவுளுக்கு ஏற்ற நாளாக கொண்டாடுவது வழமை. குமாராலாய தீபம், சர்வாலய தீப நாளுக்கு முதல் நாளில் வருவதும் அதனாலேயே.

கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய கார்த்திகை மாதப் பௌர்ணமி நாளில் தான் கார்த்திகேயன் எனப்படும் கந்தக் கடவுள் அவதாரம் செய்தார்.

அதனாலேயே அசுரர்களிடம் அடிமைப்பட்டுக்கிடந்த தேவர்களுக்கு இரங்கிய சிவ பெருமான் அவர்களை விடுவிக்க எண்ணியும் அதற்காக அவதரிக்கவுள்ள மகன் அசுரர்களின் கொடுமைகளை அழிப்பதோடு மட்டுமன்றி உலகத்தோருக்கு என்றும் அறிவூட்டும் ஆசானாகவும் ஞானபண்டிதனாகவும் இருக்கவேண்டும் என நினைத்து நெற்றிக் கண்ணைத் திறந்தார்.

அவரது நெற்றிக் கண்ணில் இருந்து சிதறிய ஒளிக்கீற்றுகள் கங்கை ஆற்[illegible]தன. கங்கை இந்த ஒளிக்கதிர்களை சரவணப் பொய்கையில் விட்டபோது அங்கு ஆறு தாமரை மலர்களில் ஆறு தெய்வீகக் குழந்தைகள் உருவானார்கள்.

சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணாகிய ஆகாயத்திலிருந்து புறப்பட்ட ஒளிக்கதிர்களை காற்று எடுத்துச் சென்று கங்கையாற்றில் விட்டது.

கங்கை சரவணப்பொய்கையில் விட்டது. அங்கு மண்ணை ஆதாரமாகக் கொண்ட தாமரை மலர்கள் ஒளிக்கதிர்களைத் தாங்கியதால் ஆறு குழந்தைகள் உருவாகினர்.

இவ்வாறு ஆகாயம், நெருப்பு, காற்று, நீர், நிலம் என சிவபெருமானின் பஞ்சபூதத் தத்துவத்தினுள் அடங்கியதுதான் சரவணபவனின் அவதாரம்.

எமது உடல் ஒரு மனை
உள்ளம் ஒரு பாத்திரம் - அதில்
உணர்வாகிய நெய்யை ஊற்றி
உயிரெனும் தீயை இட்டு
பிராணன் எனும் காற்றை நிரப்பி
அறிவுச் சுடரை ஏற்றி
அன்பினால் தூண்டிக்கொண்டிருந்தால்
ஆணவமாகிய மாயை இருள் அகலும்
பின்பு சிவபரஞ்சோதி தரிசனம் கிட்டும்

என்று மிக அழகாக அப்பர் சுவாமிகள் கார்த்திகைத் தீப உட்பொருளை எமக்கு எடுத்து இயம்புகின்றார். இத்தனை தத்துவச் சிறப்புள்ள கார்த்திகை தீபத் திருநாளை பக்திசிரத்தையுடன் கொண்டாடுவோமாக. - கங்கா.

# சு.க.-ஐ.தே.க. உடன்பாட்டை அமுலாக்கினால் அரசியல் தீர்வுக்கான கதவை அகலத் திறக்கலாம்

## புதுடில்லியில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



புதுடில்லி, டிச. 04

பொது இணக்கப்பாடு ஒன்றின் மூலம் அரசியல் தீர்வொன்றை முன்வைக்கும் நோக்கத்துடனேயே எதிர்க்கட்சிக்கும், ஆளும்கட்சிக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டால் அரசியல் தீர்வுக்கான கதவை அகலத்திறந்து வைக்க முடியும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை இந்தூரில் உள்ள இந்திய முகாமைத்துவ நிலையத்தில் நடந்த பொதுச்சொற்பொழிவு நிகழ்ச்சியில் பேசும்போது தெரிவித்தார்.

'இலங்கையின் சமாதானம்' என்ற தொனிப்பொருளில் இங்கு பேசிய ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சமாதானத்துக்கான நோர்வேயின் அனுசரணை முதல் இந்தியா மற்றும் இணைத்தலைமை நாடுகளின் ஈடுபாடு உட்பட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் ஆரம்பகாலம் முதல் இன்று வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விரிவாக எடுத்துக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை, அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தநிறுத்த உடன்படிக்கை ஆகிய இரண்டிலுமே இலங்கையின் சமாதானத்தின் எதிர்காலம் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஐ.தே.க.-சு.க. புரிந்துணர்வு உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுமானால், அரசியல் தீர்வுக்கான யோசனைகள் உருவாகும். கூடவே அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான அடிப்படையும் தோன்றிவிடும்.''

அரசும், புலிகளும் யுத்தத்துக்கு தாங்கள் தயார் என்பதை கோடி காட்டிட்டார்கள். ஆனால், யாராலும் வன்செயல்களின் பெருக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியாது. எனவே, இன்றைய அவசரமான சூழ்நிலைக்கு சுமுகமான முடிவு ஒன்றைக் கொண்டுவரவேண்டிய பொறுப்பு இணைத்தலைமை நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் உண்டு.

இது விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்கத் தவறுவோமேயானால், சம்பந்தப்பட்ட இரு தரப்பாரையும் பேச்சுமேசைக்கு மீண்டும் கொண்டுவருவதே பெரும் கஷ்டமாகிவிடும்.

சமாதான முன்னெடுப்புகளின் முன்னேற்றங்களை அவ்வப்போது அவதானித்து ஆலோசனை கூறுவதே இணைத்தலைமை நாடுகளின் ஆரம்பகாலப் பணியாக இருந்தது.

ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது. சமாதான முன்னெடுப்புகளை தக்கவைத்து பேணிப்பாதுகாப்பதே இணைத்தலைமைகளின் பணியாகிவிட்டது.

### சமாதானத்தின் எதிர்காலம்

சமாதானத்தின் எதிர்காலம், யுத்த நிறுத்த உடன்படிக்கைமற்றும்ஐ.தே.க.-சு.க. புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகிய இரண்டுமே தொங்கிக்கொண்டிருக்கிறது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் தீர்வு தொடர்பான அதன் ஏற்பாடுகள் செயலுருப்பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால், அரசியல் தீர்வுக்கான யோசனைகள் உருவாகும். கூடவே, அரசு மற்றும் புலிகளுக்கிடையிலான பேச்சைத் தொடங்குவதற்கான அடிப்படையாகவும் இது விளங்கும்.

யுத்தநிறுத்தம், மனிதாபிமானப் பணிகள், நிவாரணங்கள் மற்றும் அரசியல் பேச்சு என்ற மூன்று அணுகுமுறைகளுக்கும் யுத்தநிறுத்த உடன்படிக்கை வலுவூட்டுவதாகவும் இருக்கும்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டுமானால், அரசியல் தீர்வுக்கான யோசனைகள் முன்வைக்கப்படவேண்டும் என்ற நிலையே இன்று முன்னிற்கிறது. பேச்சைத் தொடங்கிவைக்கும் ஊடகமாக ஐ.தே.க-சு.க. புரிந்துணர்வு உடன்படிக்கையே விளங்குகிறது. யுத்தநிறுத்த உடன்படிக்கையை அடிப்படையாகவைத்து படிப்படியாக சமாதானத்துக்கான காயை நகர்த்தலாம் என்ற நிலை இன்று முற்றாக மாறிவிட்டது. பல்வேறு பேச்சுகளில் பங்குபற்றியதன் மூலம் விடுதலைப் புலிகள் பேச்சு நுணுக்கங்களைக் கண்டறிந்து அனுபவம் பெற்றிருக்கிறார்கள். பல்வேறு நாடுகளிலுமுள்ள ஆட்சிமுறைகளையும் அறிந்தும், தெரிந்தும் இருக்கிறார்கள்.

சமாதான முன்னெடுப்புகளை மேலும் காலம் தாழ்த்தாமல் விரைவில் தொடங்கிவிடவேண்டிய நேரம் வந்துவிட்டது. இது மிக மிக அவசியமாகும்.

சென்ற வருடம்தான் நேபாளத்தில் சமாதான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், சமாதான முன்னெடுப்புகள் சுமுகமாகவும், விரைவாகவும் கைகூடியுள்ளன. சம்பந்தப்பட்ட தரப்பினிடையே பூரணமான சமாதான உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்தாகியுள்ளது.

### எமது பொறுப்பு

எந்த வகையில் சமாதானத்தைக் கைகூடவைப்பதற்கான முழுப் பொறுப்பும் ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சியிடமும் எதிர்க்கட்சியான எங்களிடமுமே உள்ளது. இது எங்கள் முன்னுள்ள சவாலாகும். இதனை எதிர்கொள்ள நாங்கள் தயாராகவேண்டும். நாங்கள் தவறு இழைத்தால், சமாதான முன்னெடுப்புகள் தோற்றுப்போகும்.

### ஏற்புடைய தீர்வாக அமையக் கூடியது

ஆகவே, அரசியல் தீர்வுக்கான யோசனைகளைப் பரிசீலிக்க அரசால் ஸ்தாபிக்கப்பட்ட சட்ட வல்லுநர் குழு தமது தீர்வு யோசனைகளை இந்த டிசம்பர் முதல் வாரத்தில் சர்வகட்சி மாநாட்டுக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இதன் பின்னர் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியாகிய நாங்கள் இருசாராரும் இந்த யோசனைகள் குறித்து எமக்குள் பேசி விவாதிப்போம். இந்த தீர்வு யோசனைகளை நாங்கள் இரு தரப்பாரும் விவாதித்து, புரிந்துணர்வு உடன்படிக்கையில் சொல்லப்பட்டபடியும், டோக்கியோ மாநாட்டின் பிரகடனத்தின்படியும் தீர்வு யோசனைகளைத் தயாரித்து, அதிகாரப் பகிர்வுக்கு வழிவகுக்கலாம். எனவே, நடந்த ஆறு பேச்சுகளில் இடம்பெற்றவைகளையும், இந்திய மாதிரியையும் பின்பற்றியதாக அதிகாரப் பகிர்வுகள் இருக்குமானால், அது பேச்சு மூலம் சகலருக்கும் ஏற்புடைய தீர்வாகவே அமையும் என்பதில் ஐயமிருக்காது.

இவ்வாறு காணப்படும் தீர்வு, ஐ.தே.க. தீர்வாக இருக்கவேண்டுமென்றோ, சுதந்திரக் கட்சியின் தீர்வாக இருக்கவேண்டுமென்றோ, புலிகளின் தீர்வாகத்தான் இருக்கவேண்டுமென்றோ நாங்கள் கோரவில்லை. கேட்கவும் இல்லை. இலங்கையில் வாழுகின்ற சகல சமூகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்படும் இணக்கத் தீர்வையே நாங்கள் நாடிநிற்கிறோம். எமது இந்த நோக்கங்களை அடைவதற்கு கட்சிகள் யாவும் எமக்கு தங்கள் ஆதரவை தரவேண்டும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையும், சமாதான முன்னெடுப்புகளும் மாறிவிடும். எத்தகைய சூழ்நிலைக்கும் போதுமானளவு நெகிழ்ந்து ஈடுகொடுக்கக்கூடியனவாகவே இருக்கின்றன. எங்களுக்குத் தேவை, இவற்றைச் செயல்படுத்தும் மனோதிடமேயாகும். அதற்கான சக்திகூட எமது புரிந்துணர்வு உடன்படிக்கையில் உண்டு- என்றார்.

## பயங்கரவாதத் தடுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளருமாகிய கோட்டபாய ராஜபக்ஷ மீது கொள்ளுப் பிட்டியில் கடந்த வெள்ளியன்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் சம்பவமுமே அரசு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருவது என்ற தீர்மானத்தை எடுக்கக்காரணங்களாய் அமைந்தன என்று கூறப்படுகிறது.

போர்நிறுத்தம் செல்லுபடியற்றதாகிவிட்டது என்று புலிகளின் தலைவர் அறிவித்திருப்பது நாடு முழுவதையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி இருப்பதாக அரசு கூறுகிறது. புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு பொலிஸாருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் மேலும் அதிகாரங்களும், சட்ட ரீதியான ஏற்பாடுகளும் அவசியமாகின்றன. அவசரகாலச் சட்டம், தற்போது அமுலில் இருந்தாலும் அதன் கீழ் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் புலிகளை ஒடுக்குவதற்குப் போதா என்று கடும் போக்குச் சிங்களக் கட்சிகள் அரசிடம் வற்புறுத்தி வருகின்றன.

### சிரேஷ்ட அமைச்சர்கள் மாறுபட்ட கருத்து

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்ட அன்று - கடந்த வெள்ளிக்கிழமை - மாலையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. தாக்குதலில் உயிர்தப்பிய கோட்டபாய ராஜபக்ஷவும் அதில் கலந்து கொண்டார்.

தலைநகரில் புலிகளின் தாக்குதல்கள் கட்டுமீறி பாதுகாப்பு உத்தரவாதமற்ற சூழ்நிலை உருவாகி இருப்பது குறித்து கூட்டத்தில் கலந்துகொண்ட சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் சீற்றத்துடன் கருத்து வெளியிட்டனர் என்று கூறப்படுகிறது.

சகோதரர் கோட்டபாய மீதான தாக்குதல் காரணமாக ஜனாதிபதி ராஜபக்ஷம் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவராகக் காணப்பட்டார் என்று கூறப்படுகிறது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தி புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை அடியோடு ஒடுக்குவது பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

1998இல் தலதா மாளிகை மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்தமை பற்றியும் அமைச்சர்கள் விவாதித்தனர். மீண்டும் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யவேண்டும் என்ற கருத்தும் கூட்டத்தில் மேலோங்கியது.

எனினும், கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு சில சிரேஷ்ட அமைச்சர்கள், சமாதானப் பேச்சுகளுக்கான முயற்சிகளை அடியோடு இல்லாமற் செய்து விடும் என்று கூறி வாதிட்டனர் எனவும் அறிய வருகிறது.

போர்நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகி விட்டதாகப் புலிகள் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. நோர்வேயும் அதனை இன்னும் உறுதிசெய்யவில்லை. நாட்டில் சமாதானத்தை உருவாக்குமாறு இந்தியாவும், சர்வதேச சமூகமும் வற்புறுத்துகின்றன. இந்தக் கட்டத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அமுல் செய்வதும், புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பாக அறிவித்து அதனை நாட்டில் தடை செய்வதும் சமாதானத்துக்காக எஞ்சியிருக்கும் அற்பசொற்பவாய்ப்புகளையும் அடியோடு இழக்கச் செய்துவிடும் - என்று சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டனர் என்று தெரிகிறது.

எனினும், கோட்டபாய ராஜபக்ஷ மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல் ஏற்படுத்திய அதிர்ச்சியும், ஆத்திரமும் சிரேஷ்ட அமைச்சர்கள் பலரிடமும் மேலோங்கிக் காணப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

### அமைச்சரவைச் செயலாளரின் கருத்து

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தையும், புலிகள் அமைப்பு மீதான தடையையும் இப்போது உடனடியாக அமுலுக்குக் கொண்டுவந்தால், அது ஜனாதிபதி தனது சகோதரர் தாக்குதலுக்கு இலக்காகியதற்காக - தனிப்பட்ட முறையில் அக்கறை எடுத்து - இந்நடவடிக்கைகளைச் செய்கிறார் என்ற கருத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் என்று இந்தக் கூட்டத்தில் அமைச்சரவைச் செயலாளர் கருத்துத் தெரிவித்தார் எனவும் அறியவந்தது.

வெள்ளியன்று மாலை நடைபெற்ற இந்த அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர் மறுநாள் சனிக்கிழமை சிரேஷ்ட அமைச்சர்களுடன் ஜனாதிபதி மற்றொரு விசேட கூட்டத்தை நடத்தினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இலங்கையில் பெருமளவில் மனித உரிமைகள் மீது மீறப்படுவதற்கும், பாதுகாப்புப் படைகளின் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளுக்கும் காரணமாய் அமைந்தது என்று சர்வதேச அமைப்புகளால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வந்தது.

எனவே, தற்போது அதனை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரும் நிலையில் அதில் செய்யக்கூடிய திருத்தங்கள், நீக்கங்கள் என்பன குறித்து சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளுடனும், சட்ட வரைஞர் திணைக்கள ஆலோசகர்களுடனும் மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களுடனும் ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் ஆராய்ந்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவது சம்பந்தமான முதற்கட்ட நடவடிக்கை பெரும்பாலும் இந்த வாரமளவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## கோட்டபாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும். ஒருவர். இவர் கடவத்தையைச் சேர்ந்தவர்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டியின் உரிமை யாளரது நண்பர் எனக் கூறப்படுபவரே கைதான இரண்டாவது நபர் ஆவார்.

ஐந்து வாகனங்கள் அடங்கிய - ஆயுதப் பாதுகாப்பு மிகுந்த - வாகன அணி, அன்று காலை அலரி மாளிகை நோக்கிப் புறப்படுவது குறித்த தகவல் தற்கொலையாளிக்கு எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளில் வவுனியாவில் இருந்து கையடக்கத் தொலைபேசி ஊடாக தற்கொலையாளி வழிநடத்தப்பட்டிருக்கிறார் என்பது தெரியவந்திருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கோட்டபாயவின் வாகன அணி கடந்து சென்ற பின்னரே தற்கொலை யாளி குண்டை வெடிக்க வைத்திருக்கிறார் என்றும் -

கோட்டபாயவின் கார், குண்டுச் சிதறல்களால் தாக்கப்பட்டபோதிலும் அது குண்டு துளைக்காத வகைக் கார் என்பதால் அவர் காயம் எதுவும் இன்றித் தப்பித்துக் கொண்டார் எனவும் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் கொமாண்டோ படையினர் இருவர் உயிரிழந்தனர் என்றும், 9 படையினரும், 5 பொது மக்களும் காயமடைந்தனர் எனவும் தற்போது தெரிய வந்துள்ளது. (ஐ)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்படி யுத்தத்தின் மூலம் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது முடியாத காரியம்.

இந்நிலையில் அரசு பேச்சின் மூலம் தீர்வு காணாது யுத்தத்தைக் கையாண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை அடியோடு அழித்தொழிக்க நடவடிக்கை மேற்கொண்டால் அது இலங்கைக்குப் பாரிய அச்சுறுத்தல்களையும், பின்விளைவையும் ஏற்படுத்தும்.'' - என்று அவர் தெரிவித்தார். (ஐ)

## நாடு முழுவதிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சையளித்து வருகின்றனர்.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் கிட்டத்தட்ட 300 நோயாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் இந்நோய் பரவுவதை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அறியப்படுகிறது.

மட்டக்களப்பில் பல நூறு பேர் சிக்குன்குனியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பொது மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளும் சிக்குன் குனியாவால் பீடிக்கப்பட்டுள்ளனர். நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கப் போதிய மருத்துவ வசதி இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## பிரணாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது இலங்கை இனப்பிரச்சினை குறித்த உயர் மட்டப் பேச்சுக்களை நடத்து வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய அமைச்சரின் வருகைக்கு முன் பாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய விவரமான தீர்மானத் திட்டங்களை அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழு தயாரித்து விடும் என ஜனாதிபதி இந்திய அரசுக்குக் கூறியுள்ளார்.

A/L நாடக அரங்கு
M.M. மயூரன்
DAY CLASS
பகுதி I - கலை பற்றிய அறிமுகம்
பகுதி II - தமிழ் நாடக அரங்கு
A/L 08 அறிமுகம் (கலை)
அனுமதிகள் அனைவருக்கும்
யுனிவேர்சல்

புதிய வகுப்புகள் ஆரம்பம்
2007 கல்வியாண்டிற்கு
தரம்: 4 முதல் O/L வரை
சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டலில்
புதிய நாள் வகுப்புகள் ஆரம்பமாகின்றன
சயன்ஸ் அக்கடமி
நல்லூர் இன்று 12 மணி
அரியாலை இன்று 1 மணி
அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் குறித்த நேரத்திற்கு வருகை தரவும்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org